இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 09-09-2025

# நிராகரிக்கப்பட்ட பழனிசாமி

**“நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்**

**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி**

**கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்**

**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”** – என்பது கடுவெளிச்சித்தர் பாடல். இந்தப் பாடலுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

தன்னிடம் முதலமைச்சர் என்ற அதிகாரம் கிடைத்த போது தமிழ்நாட்டையே நாசப்படுத்தியவர்தான் இந்த பழனிசாமி. இப்போது தனது கட்சியை நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்.

தகுதியில்லாத ஒருவருக்கு அந்த நாற்காலி தரப்பட்டால், அந்த நாற்காலி நாசமாகும் என்பதற்கு அடையாளம்தான் பழனிசாமியால் நாடு பார்க்கும் பலன் ஆகும்.

ஜெயலலிதா, இறந்து போனார். சசிகலா, சிறைக்குப் போனார். இந்த நிலையில் கடந்த காலத்தில் ஒழுங்காக கப்பம் கட்டியவர் என்பதால் சசிகலா குடும்பத்தினரால், நாற்காலியில் தற்காலிகமாக உட்கார வைக்க டம்மியாகக் கொண்டு வரப்பட்டவர்தான் பழனிசாமி. தனது பெயர் அறிவிக்கப்பட்டதும், சசிகலாவின் காலை நோக்கி ஊர்ந்து போய் வணங்கினார் பழனிசாமி. ‘உங்களது கால் தூசுக்கு சமம்’ என்பதைப் போல நடித்தார் பழனிசாமி. ‘சரியான கொத்தடிமைதான்’ என்பதை அங்கீகரிக்கும் வகையில் தோள் தட்டி ஆசீர்வதித்தார் சசிகலா. அவர் தட்டிக் கொடுக்கும் போது கண்மூடி, கைகூப்பி நின்றார் பழனிசாமி. இதனை அ.தி.மு.க. உறுப்பினர்கள் மட்டுமல்ல, ஊர் பார்த்தது. உலகம் பார்த்தது. சமூக வலைத்தளங்களில் இன்னும் சிரிப்பாய் சிரித்துக் கொண்டிருக்கும் காட்சிதான் இவை.

**சசிகலா சிறைக்குள் போனதும், நாற்காலியை மொத்தமாக ஆக்கிரமித்துக் கொண்டார் பழனிசாமி. ‘டம்மி அல்ல நான், நானே மம்மி’ என்று காட்டிக் கொண்டார். தன்னை ஜெயலலிதாவாக நினைத்துக் கொண்டார். கூட்டி வந்த கூட்டத்தில் கையாட்டும் போது, தன்னை எம்.ஜி.ஆர்.ஆகக் கூட நினைத்துக் கொண்டார். தனது பதவி நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க. தலைமையின் அனைத்துக் கட்டளைக்கும் தலையாட்டினார். தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும் பா.ஜ.க. தலைமையிடம் அடகு வைத்து கையது கொண்டு மெய்யது பொத்தி நான்காண்டு காலத்தில் தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் நாசப்படுத்தினார்.**

‘நீ யார்? எனக்கு பதவி வாங்கிக் கொடுத்தாயா? நீ ஏன் சொந்தம் கொண்டாடுகிறாய்?’ என்று சசிகலாவைப் பார்த்து ஒருமையில் கேட்டதுதான் பழனிசாமியின் ‘ஒரிஜினல்’ கேரக்டர். ‘தான்’ என்ற ஆணவத்தின் வடிவம் அவர். ஆம்புலன்ஸ் டிரைவரையே மிரட்டியது அவரது அராஜகக் குணத்தின் வெளிப்பாடு ஆகும். ‘அந்த ஆம்புலன்ஸிலேயே உன்னை அனுப்பி விடுவோம்’ என்பது எல்லாம் கட்டப்பஞ்சாயத்து பேச்சு ஆகும். பழனிசாமிக்குள் என்ன இருக்கிறது என்பதை அடையாளம் காட்டும் காட்சிகள் இவை. மாண்புமிகு முதலமைச்சரையே ‘ஒருமை’யில் பேசி வருகிறார். அதனை உணர்த்திய பிறகும் அப்படித்தான் பேசுகிறார். செல்லூர் ராஜூவை அவமானப்படுத்தியதும், தம்பிதுரையை அவமானப்படுத்தியதையும் ஊடகங்கள் முன்னால் நடந்த காட்சிகள் ஆகும்.

பச்சோந்தித் தனமான, தற்குறித் தலைமைதான் பழனிசாமி என்பதை முதலில் உணர்ந்தார்கள் தமிழ்நாட்டு மக்கள். அவர் அ.தி.மு.க.வுக்கு பொறுப்பேற்றது முதல் அனைத்துத் தேர்தலிலும் தோல்வியை மட்டும்தான் பரிசாகத் தந்து வருகிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

2019 நாடாளுமன்றத் தேர்தல், 2019 சட்டமன்ற இடைத்தேர்தல், 2019 ஆம் ஆண்டில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்,

2021 ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2023 ஈரோடு இடைத் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், 2024 விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தல் ஆகிய அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர்தான் பழனிசாமி. இவரை மிகச் சரியாக முதலில் அடையாளம் கண்டவர்கள் தமிழ்நாட்டு மக்கள்தான்.

அடுத்ததாக சொந்தக் கட்சி முன்னணியினரால் நிராகரிக்கப்பட்டார் பழனிசாமி. சசிகலா, டி.டி.வி.தினகரன், ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் பழனிசாமியின் தலைமையை நிராகரித்து விட்டார்கள். இவர்களை உள்ளே விட்டால், மீண்டும் தான் தரையில்தான் உருள வேண்டி இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட பழனிசாமி, இவர்களை உள்ளே விடாமல் தடுத்து விட்டார்.

இவர்களைத் தடுத்தது மட்டுமல்ல, உள்ளே இருக்கும் அனைவரையும் மதிக்கவில்லை என்பதைத்தான் செங்கோட்டையனின் பேட்டி எடுத்துக் காட்டுகிறது. ‘நாங்கள் ஆறுபேர் சென்று கோரிக்கை வைத்தோம். அதைக் கேட்கும் மனநிலையில் பழனிசாமி இல்லை’ என்று செங்கோட்டையன் சொல்லி இருக்கிறார். **‘நான் வைத்தது தான் சட்டம், இருப்பவர்கள் இருங்கள்’ என்ற தன்மையோடு பழனிசாமி நடந்து கொள்கிறார். பதவி பறிக்கப்பட்ட செங்கோட்டையன், ‘எனக்கு மிகுந்த மகிழ்ச்சி’ என்கிறார். ‘எங்களையும் நீக்குங்கள்’ என்று சொந்தக் கட்சிக்காரர்களே சொல்வது, பழனிசாமி முகத்தில் விழுந்த அடியே ஆகும்.**

பழனிசாமியின் தமிழ்நாடு பயணமும் தோல்வியாகத் தான் முடிந்தது. கூட்டி வந்த கூட்டம், அவரது பேச்சுக்கு முக்கியத்துவம் தரவில்லை. அவர் பேசத் தொடங்கியதும் கலைகிறது கூட்டம். நிற்பவர்கள் மத்தியிலும், அவரது உரைக்கு வரவேற்பு இல்லை. மக்கள் நிற்க வைக்க இடம் தவிர, மற்ற இடத்தில் அவருக்கு எந்த வரவேற்பும் இல்லை. பல ஊர்களில் அவருக்கு எதிராக கருப்புக் கொடி காட்டினார்கள். பொதுமக்களும் கருப்புக் கொடி காட்டினார்கள். அ.தி.மு.க. வினரும் கருப்புக் கொடி காட்டி வருகிறார்கள்.

**தமிழ்நாட்டு மக்களால், அ.தி.மு.க. முன்னணியினரால், அ.தி.மு.க. தொண்டர்களால்.. இப்படி ஒட்டுமொத்தமாக அனைவராலும் நிராகரிக்கப்பட்டவர்தான் பழனிசாமி. அவரது ஆணவம் அனைவராலும் நொறுக்கப்பட்டு வருவதைத்தான் இப்போது நாம் பார்க்கிறோம்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை இலண்டன் நகரில், முல்லை பெரியாறு அணையைத் தந்து நம் மக்களின் மனங்களில் நிறைந்து வாழும் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களது சிலையை, அவரது சொந்த ஊரான கேம்பர்ளி நகரில் நிறுவியதற்காக, அவரது குடும்பத்தினரும், செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தைச் சார்ந்தவர்களும் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். திருமதி. துர்கா ஸ்டாலின் உடன் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.9.2025 அன்று இலண்டன் மாநகரில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை..!

முதல் பக்கத் தொடர்ச்சி!

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை உங்களுக்காக ஓய்வி ல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் துறை சார்பில், செய்து கொண்டிருக்கின்ற முக்கியமான சில முன்னெடுப்புகளை மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால்,

கடந்த நான்கு ஆண்டுகளாக, ஜனவரி 12ஆம் நாளை, அயலகத் தமிழர் நாளாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு மட்டும், இந்த விழாவுக்கு 62 நாடு களிலிருந்து தமிழர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள்!

- **அயலகத் தமிழர் நலவாரியம்,**
- **அயலகத் தமிழர்களுக்கான டோல்ஃப்ரீ ஹெல்ப்லைன்,**
- **புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு சுழல் நிதி,**
- **தமிழ்நாட்டிற்கு வெளியே வாழுகின்ற தமிழர்களுக்கு இன்ஷூரன்ஸ்**

என்று ஏராளமான திட்டங்களை செய்து கொண்டிருக்கிறோம்.

வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் ஓடோடி வந்து உதவுகின்றோம்.

**புலம் பெயர்ந்தவர்களுக்காக ‘வேர்களைத்தேடி’ திட்டம்!**

இது எல்லாவற்றையும்விட, மிக முக்கியமான திட்டம்தான், “வேர் களைத் தேடி” என்ற திட்டம்! புலம் பெயர்ந்த தமிழர்களின் குழந்தை களை, மாணவர்களை தங்களுடைய வேர்கள் இருக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்று, நம்முடைய வரலாற்றை, பண்பாட்டை அறிமுகம் செய்து கொண்டிருக்கிறோம். இப்படி தமிழ்நாட்டிற்கு வந்த பலர், சில தலைமுறைகளாக விட்டுச் சென்ற சொந்தங்களை தேடிக் கண்டுபிடித்து உருகி இருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்தவரைக்கும், வாழ்வதும், வளர்வதும், தமிழும் தமிழ் இனமுமாய் இருக்கவேண்டும்!

தலைவர் கலைஞர்தான் சொல்வார், “தமிழர்களாக ஒரு கூட்டத்திற்கு வந்து அமர்ந்து, எழுந்து செல்லும் போதும் தமிழர்களாக கலைந்து செல்லும் காலம் வந்தால் அதுதான் நான் எதிர்பார்க்கும் இலட்சிய வெற்றி!” என்று சொல்வார். அந்தளவுக்கு வேற்றுமைகள் நிறைந்திருந்த சமூகம் இன்றைக்கு, இவ்வளவு ஒற்றுமையாக இருப்பதுதான் நம்முடைய வெற்றி!

தமிழர்கள் உலகத்திற்கானவர்கள்! யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று சொன்னவர்கள்– பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொன்னவர்கள் இந்தப் பெருமையை, அடையாளத்தை நம்முடைய செயல்களால் நிலைநாட்டவேண்டும்!

சாதி, மதம், ஏழை, பணக்காரன் போன்ற வேறுபாடுகள், நம்மை பிரிப்பதோடு, நம்முடைய இனத்தையே வளரவிடாது.

**உங்களின் விருந்தோம்பலுக்கு என் அன்புதான் நன்றி!**

நம்மை எதுவெல்லாம் பிரிக்குமோ, அதையெல்லாம் நாம் மறக்கவேண்டும்! எதுவெல்லாம் நம்மை இணைக்குமோ, அதையெல்லாம் நாம் நினைக்க வேண்டும்! எனவே, தமிழ் என்ற வேரில் வளர்ந்திருக்கும் நாம், நம்முடைய அடையாளத்தை ஒருபோதும் மறக்கக் கூடாது!

அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வாருங்கள், உங்களுக்காக உங்கள் சகோதரனாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அங்கே இருப்பான். அந்த நம்பிக்கையோடு வாருங்கள்.

இங்கே நீங்கள் கொடுத்திருக்கின்ற வரவேற்புக்கும், விருந்தோம்பலுக்கும் என்னுடைய அன்புதான், என்னுடைய நன்றி! என்பதை நான் உங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனவே, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன் – பெருமைப்படுகிறேன்–பூரிப்படைகிறேன் – புலங்காகித உணர்வோடு நின்று கொண்டிருக்கிறேன். நான் எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு, எத்தனையோ மாநிலங்களுக்கு, எத்தனையோ நாடு களுக்கு அரசின் சார்பில் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற முறையில், மேயராக இருந்து பொறுப்பேற்று பல நாடுகளுக்கு சென்றிருக்கக்கூடிய அந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கிறேன்.

இப்போது தமிழர்களாக இருக்கக்கூடிய உங்களை எல்லாம் சந்திக்க வந்திருப்பதில்தான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். எல்லையில்லா அன்போடும், மறக்க முடியாத நினைவுகளோடும் தான் இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். உங்கள் அனைவருக்கும் நான் மீண்டும், மீண்டும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து, இந்த நட்பும், இந்த தொடர்பும், தொடர்ந்து இருக்கவேண்டும் – இருக்கிறது – இருக்கும் என்ற நம்பிக்கையோடு, இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக் கூடிய அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து, மீண்டும் ஒரு முறை உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை தெரிவித்து, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (07.09.2025) திருச்சிராப்பள்ளி டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் கட்டப்பட்டு வரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவு சார் மையத்தின் கட்டுமானப் பணியினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன், பொதுப் பணித்துறை முதன்மை தலைமை பொறியாளர் எஸ்.மணிவண்ணன், திருச்சிராப்பள்ளி மண்டலத் தலைமை பொறியாளர் செந்தில், கண்காணிப்பு பொறியாளர் செந்தில்குமார், செயற்பொறியாளர் திருமதி. அன்பரசி, மண்டலக் குழுத் தலைவர் மு.மதிவாணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.